


28.10. 2024

தலைப்புச் செய்திகள்

- வதோதரா ராணுவ போர் விமான உற்பத்தி மையம் இளையோருக்கு தொழில்நுட்ப உதவிகளோடு வேலை வாய்ப்புகளையும் வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- பிரதமரின் ரோஜ்கர் வேலைவாய்ப்பு முகாம் மூலம் நாளை மத்திய அரசு பணியிடங்களில் 51 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படவுள்ளன.
- நாடுமுழுவதும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு வாரத்தை ஒட்டி மத்திய மாநில அரசு அலுவலகங்களில் ஊழல் ஒழிப்பு உறுதி மொழி இன்று ஏற்கப்பட்டது.
- தீபாவளி பண்டிகையின் போது பொதுமக்கள் பட்டாசுகளை பாதுகாப்பாக கையாள வேண்டுமென மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் அறிவுறுத்தியுள்ளார்.
- இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 3-வது இறுதி ஒருநாள் மகளிர் சர்வதேச கிரிக்கெட் போட்டி அஹமதாபாத்தில் நாளை நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

குஜராத் மாநிலம் வதோதராவில் தொடங்கப்பட்டுள்ள டாடா ராணுவ போர் விமான உற்பத்திமையம் வான்வெளி பிரிவின் நம்பிக்கை நாடாக உலகளிவில் இந்தியாவை நிலைநிறுத்துவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

டாடா விண்ஊர்தி வளாகத்தில் C-295 ரக விமான தொழிற்சாலையை ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்சஸுடன் இணைந்து இன்று தொடங்கிவைத்த பிரதமர், இத்தொழிற்சாலை இரு நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவதாக தெரிவித்தார்.

இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்திற்கு உத்வேகம் அளித்து உலகத்திற்காக தயாரிக்க இந்த தொழிற்சாலை ஆளுமை வழங்கியுள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்தார்

ராணுவ தளவாட உற்பத்தியில் இந்தியாவின் திறன்கள் அதிகரித்து வருவதை எடுத்துரைத்த பிரதமர், சர்வதேச நாடுகளுக்கான விமானங்களை இந்தியா தயாரிக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்றும், இந்தியாவின் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் இதில் முக்கிய பங்காற்றும் என்றும் குறிப்பிட்டார்.

ராணுவ தளவாட உற்பத்தியில் இந்தியா பிரம்மாண்டமாக வளர்ந்து வருவதாக கூறியஅவர், இப்பிரிவில் எழுச்சிமிகு நாடாக நம்தேசம் திகழ்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் பாதுகாப்பு ஏற்றுமதி 30 மடங்காக அதிகரித்துள்ளதாகவும்,

100-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் பிரதமர் கூறினார்.

வதோரா டாடா விமான உற்பத்தி மையம் இளையோரின் தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கு வகைசெய்வதோடு ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளுக்கும் வழிகோலும் என்றார்.

வரும் 2026-ம் ஆண்டை கலாச்சாரம், சுற்றுலா, செயற்கை நுண்ணறிவு ஆண்டாக கொண்டாட இந்தியாவும் ஸ்பெயினும் முடிவு செய்திருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்சஸ், ஐரோப்பிய தொழிற்சாலைகளுக்கான நுழைவாயிலாக ஸ்பெயினின் ஏர் பஸ் மற்றும் டாடாவின் வான் உற்பத்தி மையம் அமையும் என்றார்

டாடா நிறுவனம் 56 சி 295 ரக ராணுவ போர் விமானங்களை உற்பத்தி செய்யும் நிலையில் 40 வதோதராவிலும்,

16 போர் விமானங்கள் ஸ்பெயினிலும் உற்பத்தியாகின்றன.

இந்த போர் விமானங்கள் 2026-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் செயலாக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வை தொடர்ந்து இருநாட்டு தலைவர்களும், பிரதிநிதி அளவிலான பேச்சுவார்த்தையும் மேற்கொண்டனர்.

❖❖❖❖❖❖❖

ரோஜ்கர் மேளா

பிரதமர் திரு. நரேந்திரமோடி மத்திய அரசின் ரோஜ்கர் யோஜனா வேலைவாய்ப்பு திட்ட முகாமின் கீழ் 51 ஆயிரம் இளையோருக்கு பணி நியமன ஆணைகளை நாளை காணொலி வாயிலாக வழங்கி உரையாற்றுகிறார்

இதனொரு பகுதியாக திருச்சியில் நடைபெறும் ரோஜ்கர் மேளாவில் ரயில்வே மற்றும் அஞ்சல் துறை காலி பணியிடங்களுக்கு தேர்வுசெய்யப்பட்ட 127 பேருக்கு பணி நியமன ஆணைகளை மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் வழங்கவுள்ளார்.

நாடுமுழுவதும் பல்வேறு பகுதிகளில் மத்திய அமைச்சர்கள் இளையோருக்கு மத்திய அரசு பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை வழங்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

அமித்ஷா

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா புதுதில்லியில் இன்று நடைபெறும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் 20-வது நிறுவன தின கொண்டாட்டத்தில் பங்கேற்கிறார்.

“பேரிடர் அபாயங்களை குறைக்க செயல்பாடுகளில் மாற்றங்களை உருவாக்குதல்” என்பதை கருப்பொருளாக கொண்டு நடைபெறும்

இந்நிகழ்ச்சியில் பேரிடர் மேலாண்மைத்துறை பணியாளர்கள் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖

லஞ்ச ஒழிப்பு

நாடுமுழுவதும் ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் இன்று தொடங்கியது.

தேசவளத்திற்கான கலாச்சார ஒருமைப்பாடு என்ற கருப்பொருளுடன் லஞ்ச ஒழிப்பு வாரம் கடைபிடிக்கப்படுகிறது.

லஞ்சஒழிப்பு விழிப்புணர்வு இயக்கத்தின் ஒருபகுதியாக அமைச்சகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள், மத்திய மாநில அரசு அலுவலகங்களில் ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி இன்று ஏற்கப்பட்டது.

தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் ஊழல் ஒழிப்பு உறுதிமொழியை அலுவலர்கள் ஏற்றுக்கொண்டனர்.

புதுதில்லியில் ஆகாஷ்வாணியின் தலைமை இயக்குநர் டாக்டர் பிரக்யா பாலிவால் கவுர் தலைமையில் ஊழியர்கள் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் ஒரு கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முத்துராமலிங்க தேவர் அரங்கத்தை இன்று சென்னையிலிருந்து காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

9 ஆயிரத்து 848 சதுரஅடி பரப்பளவில் பொதுமக்களுக்கான காத்திருப்பு கூடம் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கான நிழற்கூரையுடன் அமைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

போக்குவரத்து துறை

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் பணி புரிந்து டிசம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை ஓய்வுபெற்ற 279 பேருக்கு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்பு தொகையாக 372 கோடி

ரூபாயை ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஓய்வூதியதாரர்களுக்கு வருங்கால வருங்கால வைப்புநிதி, பணிகொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை ஆகியவையும் இதில் அடங்கும்.

❖❖❖❖❖❖❖

சுப்ரமணியன்

தீபாவளி பண்டிகையின் போது பொதுமக்கள் பட்டாசுகளை பாதுகாப்பாக கையாள வேண்டுமென மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், கே.எம்.சி. அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் 25 படுக்கை வசதிகளுடன் தீவிர சிகிச்சை பிரிவு அமைக்கப் பட்டுள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

பெரியகருப்பன்

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை சார்பில் நியாய விலைகளில் பாட்டாசுகள் மற்றும் மளிகை பொருட்கள் குறைந்த விலையில் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.K.R. பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

ஆர்.என்.ரவி

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் 35-வது பட்டமளிப்பு விழா இன்றுமாலை நடைபெறுகிறது.

தமிழக ஆளுநரும், பல்கலைக்கழக வேந்தருமான திரு. R.N.ரவி 277 மாணாக்கருக்கு நேரடியாக பட்டங்களை வழங்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளில் பயின்ற ஆயிரத்து 838 மாணாக்கரும், இணைப்பு கல்லூரி உள்ளிட்ட 42 ஆயிரத்து 433 மாணாக்கரும் பட்டம்பெறவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

தங்கம் தென்னரசு

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக மழை பெய்த நிலையில் அங்குள்ள நீர்நிலைகளை அம்மாவட்ட பொறுப்பு அமைச்சரும், மாநில நிதியமைச்சருமான திரு. தங்கம் தென்னரசு இன்று ஆய்வுசெய்தார்.

பல்வேறு நலத்திட்டப் பணிகளையும் துவக்கி வைத்தார்.

சுசீந்திரம் பழையாறு பகுதி கரையோரங்களில் நடைபெறும் சீரமைப்பு பணிகளை பார்வையிட்ட அமைச்சர் தண்ணீர் தேங்கும் பகுதிகளையும் வடிகால் கால்வாய்களை தூர்வாரி சீரமைக்கும் பணிகளையும் கேட்டறிந்தார்.

பறக்கின் கால்வாய் தூர்வாரும் பணிகளையும் அவர் பார்வையிட்டார்.

இதனைத்தொடர்ந்து தோட்டக்கலை துறை சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அழகுமீனா உடனிருந்தார்.

❖❖❖❖❖❖❖

மினி டைடல் பூங்கா

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 35 கோடிரூபாய் மதிப்பில் மினி டைடல் பூங்கா தொடங்குவதற்கான பூர்வாங்க பணிகள் தொடங்கப் பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இப்பணிக்கான வரைபட தயாரிப்பு திட்ட மேலாண்மை பணிகளுக்கு ஆலோசகர்களை தேர்வுசெய்ய கோரிக்கை புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது

❖❖❖❖❖❖❖

வாக்களார் பட்டியல்

தமிழகத்தில் வரைவு வாக்களார் பட்டியல் நாளை வெளியிடப்படவுள்ளது.

அடுத்தமாதம் 28-ம் தேதிவரை வாக்களார் பெயர்சேர்ப்பு நீக்கம் உள்ளிட்ட விண்ணப்பங்களை அளிக்கலாம்.

இந்த மனுக்கள் மீது டிசம்பர் 24-ம் தேதிக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் வரும் ஜனவரி 6-ம் தேதி வெளியிடப்படுகிறது

❖❖❖❖❖❖❖

ஜெகன் பெரியசாமி

தூத்துக்குடி மாநகராட்சியில் 60 வார்டுகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித்திட்டப்பணிகளில் 80 சதவிகிதம் முடிவடைந்ததாக மேயர் திரு. ஜெகன் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

மாநகராட்சி கூட்டத்தில் இன்று இதனை தெரிவித்த அவர், முறைகேடாக குடிநீர் இணைப்பு பெற்றவர்கள் டெபாசிட் தொகையை உடனடியாக செலுத்தி இணைப்பு முறையாக பெற்றுக்கொள்ளலாம் என கூறினார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

நாமக்கல் மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையை ஒட்டி மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள நெறிமுறைகளை பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டுமென்று ஆட்சித்தலைவர் டாக்டர் உமா கேட்டுக்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

தேனி வாய்ஸ்

தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் நீர்வரத்து சீரானதையடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க இன்று அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

வானிலை

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாட்டில் அடுத்த 4 நாட்களுக்கு பரவலாக மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

வரும் ஒன்றாம் தேதி ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி திருப்பத்தூர், சேலம், நாமக்கல், கரூர், திருவண்ணாமலை, மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று இம்மையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 3-வது இறுதி ஒருநாள் மகளிர் சர்வதேச கிரிக்கெட் போட்டி அஹமதாபாத்தில் நாளை நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒருபோட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.